1970 மார்ச் 25]

THIRU K. VINAYAKAM: After the opening of the sub-court at Canjeevaram, the number of cases are not so much as to justify its existence. That is the complaint of the Judge himself. What steps are bting taken by Government so as to justify it or make it a viable unit? Will the Government extend its area of operation by including one more taluk under the jurisdicion of that Court?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மாவட்ட நீதிபதிகளின் பரிந்துரையின் மேல் உயர் நீதிமன்றம் வருகிற வழக்குகளைக் கணக்குப்பார்த்துதான் புதியதாக துணை நீதிமன்றம் ஏற்படுத்து கிறோம். வேலை இல்லை என்று தெரிந்தால் அதை எடுத்துவிடுவோம்.

அரக்கோணத்தில் உருக்கு வார்ப்படத் தொழிற்சாலை.

*545 வின—திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விளுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் நகரத்தில் ரஷ்ய நாட்டு ஒத்துழைப்புடன் ஸ்டீல் காஸ்டிங் பிளான்ட் (steel casting plant) தொழிற்சாலை நிறுவும் வேலை எந்த நிலையில் உள்ளது?

(இ) மேற்படி தொழிற்சாலைக்கான கட்டடம், இயந்திர சாதனங்களுக்காக ஆரம்ப முதல் இன்று வரையில் செலவழிக்கப் பட்ட தொகை எவ்வளவு?

(உ) எத்தனை பொறியியல் வல்லுநர்கள் அமர்த்தப் பட்டுள்ளார்கள்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்:

(அ) இத்தொழிற்சாலைக்கு வேண்டிய நிலம் கையகப் படுத்தப்பட்டு, இத்திட்டத்திற்கென்று ஒதுக்கி வைக்கப் பட்டுள்ளது. தமிழ்நாடு மின்சார வாரியம் மின்சக்தி வழங்க உறுதி தந்துள்ளது. தனித் துணை மின் நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது.

பொதுச் சுகாதாரப் பொறியியல் பணித்துறை, நீர் வழங்கு வசதிகள் செய்து தந்துள்ளது. தேவைப்படும் மேல் நிலைத் தொட்டிகளும் சேமிப்புத் தொட்டிகளும் கட்டப்பட்டுள்ளன. தொழிற்சாலைப் பகுதி வரை கிளை-இருப்புப்பாதை அமைக்கப் பட்டுள்ளது; அதன் வழி வண்டிகள் சென்று வருகின்றன.

இயந்திரங்கள், சாதனங்களில் 90 சத விதம், தொழிற்சாலைப் பகுதியை வந்தடைந்துள்ளது. உள் நாட்டில் உற்பத்தியான கருவிகளும் வாங்கப்படுகின்றன.

பல்வேறு கட்டிட வேலைகள் நடந்தேறி வருகின்றன. வேலை யினங்களில் பல முடிவடைந்துள்ளன.

(இ) இத்தொழிற்சாலைக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 7 கோடியில் இதுவரை ரூ. 168.56 லட்சம் இதற்காகச் செலவிடப் பட்டுள்ளது.

(உ) தொடர் உருக்கு வார்ப்படத் தொழிற்சாலைக்காக 15 தொழில் நுட்பப் பொறியாளர்களும் 22 கட்டிடப் பொறியாளர்களும் வேலையிலமர்த்தப்பட்டுள்ளனர்.

DR. H. V. HANDE : May I know whether the capital cost per tonne of production compares favourably with other steel casting plants in India? Is it not a fact that there is increase in the capital cost per tonne after the construction has commenced and the plant started working? Is it not a fact that there is a report by Dastur & Company or somebody else that the cost per tonne is much more than similar factories in India?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களின் விலையைப் பற்றி திட்டத்தைத் தொடங்கிய காலத்திலேயே ஆராய்ந்திருக்கிறார்கள். அப்போது லாபகரமாக நடக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. டிவால்யுவேஷன் செய்த காரணத்தினால் விலைகள் அதிகமாகப்போய்விட்டன. இதன் காரணமாக உற்பத்திச் செலவும் கூடலாம் என்ற நிலை இருக்கிறது. பொதுவாக லாபமாக நடைபெற முயற்சி எடுக்கப்படுகிறது.

திரு. இல. பலராமன்: இந்தத் திட்டத்தை ஏற்படுத்தியபோது எந்தக் காலத்திற்குள் முடியவேண்டுமென்று திட்டமிடப்பட்டது? எப்போது முடியும்? இரும்பின் விலை என்னவாக இருக்கும் என்பதுபற்றி தோராயக் கணக்கு கொடுக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : போதுமான இரும்பு, உருக்குப் பொருள்கள் கிடைக்காத காரணத்தினால்தான் தாமதம் ஆகிறது. இந்த மாத இறுதிக்குள் நமக்குத் தேவையானவற்றை மத்திய அரசு ஒதுக்கித்தரும் என்று எதிர்ப்பார்க்கிறோம். ஒதுக்கித் தந்தால் 1970 டிசம்பர் மாத இறுதிக்குள் வேலை முடிந்துவிடும். 90 சத வீதம் இயந்திர சாதனங்கள் ஏற்கனவே வந்துவிட்டன.

திரு. எம். பூபதி: ரஷ்ய நாட்டு ஒத்துழைப்புடன் இது ஆரம்பிக்க இருப்பதாக அமைச்சர் சொன்னார்களே, ரஷ்ய நாட்டார் என்ன என்ன உதவிகளைச் செய்கிறார்கள்?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ரஷ்ய நாட்டுடன் ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறோம். இயந்திரங்களை (deferred payment) முறையில் கொடுத்திருக்கிறார்கள். அந்நாட்டு நிபுணர்கள் இங்கே தங்கிக்கொண்டு அவற்றை அமைத்துக்கொடுக்கவும் இருக்கிறார்கள்.

படித்தும் வேலையில்லாதவர்களுக்கு வேலைவாய்ப்பு

*548 வினா—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

படித்துவிட்டு வேலையில்லாமல் கஷ்டப்படுகிறவர்களுக்கு வேலை கொடுக்க சர்க்காரின் திட்டமென்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த வினா பொதுவான வேலைவாய்ப்புக் கொள்கை பற்றியதாகும். தேசீயத்தன்மை